நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, திருச்சிராப்பள்ளி

முன்னிலை : திருமதி **P. சுபாஷினி, B.A.B.L.,**
நீதித்துறை நடுவர் எண்.1
திருச்சிராப்பள்ளி.

2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**886/2022**</u>

S. ரவிக்குமார், 51/2022 ...குற்றமுறையிடுபவர்
த/பெ. சாமிநாதன்,
No.22-5/6, 5th Floor,
கிறிஸ்டல் பிளாசா,
நந்திகோவில் தெரு,
திருச்சி – 02.

/எதிர்/

M. காமாட்சி, 42/2022 ...எதிரி
க/பெ. சுரேஷ் செபஸ்டியான்,
No. 3/365, அந்தோணியார் கோவில் தெரு,
மேல குமரேஷ்புரம்,
கிருஷ்ணா சமுத்திரம்,
கூத்தைபார், திருவெறும்பூர்,
திருச்சி – 13.

<u>சென்னை உயர்நீதிமன்றத்தின் **07.04.2021** ம் தேதியிட்ட **R.O.C.No.814/2020/RG/F1** ன் படி வழக்கின் சுருக்கம்</u>

01.	எதிரி நீதிமன்றகாவலில் இருந்த நாள்			:	--
02.	மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்			:	18.08.2022
03.	முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள்			:	--
04.	எதிரியிடம் கு.வி.மு.ச. 251 பிரிவின் கீழ் வினவிய நாள்			:	30.12.2022
05.	இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பல்வகை மனுக்களின் விவரம்			:	
	குற்றப் பல்வகை மனு எண்.	உத்தரவு அனுமதிக்கப்பட்டது/ தள்ளுபடி செய்யப்பட்டது.	மேல்முறையீட்டு வழக்கு விவரம்		

	--	--	--		
06.	சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்:			:	
	சாட்சிகள்	முதல் விசாரணை நாள்	குறுக்கு விசாரணை நாள்		
	வா.சா.1	02.09.2022	07.03.2023, 06.07.2023		
07.	எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள்			:	20.07.2023
08.	எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய/ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள்			:	--
09.	மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு			:	--

இவ்வழக்கானது 02.09.2022 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. போஜராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.திருநாவுக்கரசு அவர்கள் ஆஜராகியும், 31.05.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>தீர்ப்புரை</u>

வழக்கானது புகார்தாரரால் எதிரி மீது மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் :-

கடந்த 12.04.2020 ம் தேதியன்று எதிரி ரூ. 8,00,000/- ஐ கடனாக பெற்றுக் கொண்டு 3 மாதங்களில் 18% வட்டியுடன் தருவதாகக் கூறி கடன் தொகையை திருப்பி தரவில்லை என்று புகார்தாரர் எதிரியை அணுகி கடன் தொகையை திரும்ப கேட்டபோது, மேற்படி கடனை பகுதியாக தீர்க்கும்பொருட்டு எதிரி வங்கியான Bharath Heavy Electricals Employees Co-operative Bank Ltd., Head Office, Trichy - 620 014 என்ற வங்கி காசோலை எண்.584501 ஐ 28.06.2022 அன்று ரூ. 8,00,000/-க்கு கொடுத்ததாகவும், அதனை புகார்தாரர் அவரது வங்கியான ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, மேலசிந்தாமணி கிளை திருச்சியில் 08.07.2022 அன்று வசூலுக்காக செலுத்தியதாகவும், அந்த காசோலையானது எதிரியின் கணக்கில் போதிய பணமில்லை என்று 08.07.2022 ம் தேதியன்று திருப்பப்பட்டதாகவும், கடந்த 18.07.2022 ம் தேதியன்று வாதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல் "Intimation Served Party Not Claimed" என்ற குறிப்புடன் 26.07.2022 அன்று திருப்பி அனுப்பியதாகவும், எதிரி புகார்தாரருக்கு இதுவரை பணம் கொடுக்கவில்லை என்றும், எனவே மேற்படி எதிரி பிரிவு 138 மாற்று முறை ஆவணச்சட்டம் கீழ் மோசடி செய்துள்ளதால் எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. புகார்தாரரின் சத்திய பிரமாண வாக்குமூலம் பதிவு செய்த பிறகு மனுவில் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து, வழக்கினை கோப்பிற்கு எடுப்பதற்கு முகாந்திரம் இருந்ததால் வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் பேரில் எதிரி முன்னிலையாகிய பிறகு, அவருக்கு புகார் மனுவின் நகல்கள்

JUDGEMENT (watermark)

வழங்கப்பட்டு, புகார் குறித்து எதிரியிடம் வினவியபோது, எதிரி குற்றமற்றவர் என்று கூறியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. புகார்தாரர் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து புகார்தாரர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, புகார்தாரர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பு சாட்சியமானது முடிக்கப்பட்டது. புகார்தாரர் தரப்பில் சாட்சியமானது முடிக்கப்பட்டு அதன்பிறகு புகார்தாரரது சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து 313(1)(ஆ) கு.வி.மு.ச. பிரிவின்படி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று தெரிவித்தார். எதிரி தரப்பில் சாட்சி உண்டு என்று கூறப்பட்டாலும், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

5. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால், புகார்தாரர், எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழான வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளாரா என்பதும், எதிரி மேற்படி குற்றத்திற்கு தண்டிக்கப்படக் கூடியவரா? என்பதும் ஆகும்.

6. கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், புகார்தாரர் அவரது வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக தன்னை வா.சா.1 ஆக விசாரணை செய்து கொண்டு கடந்த 28.06.2022 தேதியிட்டு Bharath Heavy Electricals Employees Co-operative Bank Ltd., Head Office, Trichy – 620 014 கிளைக்கான காசோலை எண். 584501 வா.சா.ஆ.1 ஆகக் குறியீடு

WWW.LIVELAW.IN

செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி காசோலை எதிரி வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்ற காரண குறிப்புடன் திரும்பி வந்து விட்ட வங்கி குறிப்பாணை வா.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 18.07.2022 அன்று புகார்தாரர் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள தாகவும், மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் Intimation Served Party Not Claimed என்ற மேற்குறிப்புடன் 26.07.2022 அன்று திரும்பி அனுப்பி விட்டதாகவும், அந்த அஞ்சல் உறை வா.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி பதில் அறிவிப்பு எதுவும் தரவில்லை என்றும், தொகையும் திருப்பி கொடுக்கவில்லை என்றும், எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ஏற்பட்ட சட்ட துணிபினை மறுக்கும் விதமாக எந்தவொரு சாட்சிய சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், புகார்தாரர் தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் புகார்தாரரின் வழக்கானது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரியை குற்றவாளி என தீர்மானித்து தண்டனை வழங்கவேண்டும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், புகார்தாரர் குறிப்பிடும் தேதியில் எதிரி புகார்தாரரிடமிருந்து எந்தவொரு தொகையும் கடனாக பெறவில்லை என்றும், எதிரியின் கணவர் புகார்தாரிரடம் 2016 ம் ஆண்டு கடன் வாங்கியிருந்தார் என்றும், அந்த கடன் தொகையில் ரூ.35,000/- கடன் மட்டுமே எதிரியின் கணவர் பாக்கி தரவேண்டும் என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் எந்தவொரு வரவு செலவும் இல்லை என்றும், எதிரியின் கணவர் வாங்கிய கடன் தொகைக்கு ஜாமினாக இந்த எதிரியின் பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட காசோலையை எதிரி வழங்கியுள்ளார் என்றும், எதிரிக்கும்

JUDGMENT TODAY

இந்த வழக்கிற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்றும், எதிரிக்கு எதிரான இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

9. புகார்தாரர் தரப்பு வாதங்கள், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்ததில், புகார்தாரர் பிரிவு 138 ன் கீழான சட்ட வகையங்கள் அனைத்தையும் நிரூபணம் செய்துள்ளாரா என்பதை குறித்தும், பிரிவு 139 ன் கீழ் புகார்தாரருக்கு ஏற்பட்டுள்ள சட்டப்படியான அனுமானத்தை முரண்படுத்தும் விதமாக எதிரி தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ளாரா என்பது குறித்தும் இந்நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கிறது. அதன்படி சட்டப்பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவானது பின்வருமாறு குறிப்பிடுகிறது.

i). ஒரு கடனை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ திரும்ப செலுத்தும்பொருட்டு ஒரு காசோலையானது வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ii). அந்த காசோலையானது காசோலை எழுதப்பட்ட தேதியிலிருந்து 3 மாதத்திற்குள் வங்கியில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

iii). அவ்வாறு செலுத்தப்பட்ட காசோலையானது, வங்கியிலிருந்து போதிய பணமில்லை என்றோ அல்லது Exceeding the amount என்றோ குறிப்பிட்டு திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

iv). அவ்வாறு காசோலை திருப்பப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், காசோலையை முறையாக வைத்திருப்பவர் (Holder due in course) அல்லது காசோலை செலுத்தப்பட வேண்டியவர் (payee) எழுத்துபூர்வமாக மேற்படி தொகையை கோரி அறிவிப்பு அனுப்ப வேண்டும்.

WWW.LIVELAW.IN

v). மேற்படி அறிவிப்பினை பெற்றுக் கொண்டு வரைவாளர் (Drawer) அறிவிப்பினை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலை தொகையினை திரும்ப செலுத்த தவறியிருக்க வேண்டும்.

10. புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது எதிரி புகார்தாரருக்கு காசோலை வழங்கியுள்ளார் என்பது தெரியவருகிறது. மேற்படி காசோலையை வங்கியில் செலுத்தப்பட்டு, அது திருப்பப்பட்டதும் மேற்படி காசோலையானது திருப்பப்பட்ட தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதும், மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொள்ளாமல் அறிவிப்பை திருப்பி அனுப்பியுள்ளதும், அதன்பிறகும் பணத்தை திருப்பி செலுத்தாமலும் இருந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

11. மேற்படி புகார்தாரரின் ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது புகார்தாரருக்கு பிரிவு 139 மாற்றுமுறை ஆவணச்சட்டம் கீழ் சட்டத்துணிபு ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி சட்ட துணிபினை மறுக்கும் விதமாக எதிரி அவரது கட்சியை நிரூபணம் செய்துள்ளாரா? என்பது பொறுத்து பரிசீலனை செய்யும்போது எதிரி தரப்பில் எதிரியின் கணவர் புகார்தாரரிடம் பெற்ற கடனுக்காக எதிரி அவர் கையொப்பமிட்ட பூர்த்தி செய்யப்படாத காசோலை வழங்கியதாகவும், மேற்படி எதிரியின் கணவர் பெற்ற கடனையும் பெரும் பகுதி எதிரியின் கணவர் திருப்பி செலுத்திவிட்டார் என்றும், மீதி தொகைக்காக இந்த வழக்கு எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

JUDICIARY

12. மேற்படி எதிரியின் கணவர் பெற்ற கடனுக்காகத்தான் எதிரி அவரது காசோலையை வழங்கினார் என்பது குறித்து புகார்தாரரிடம் குறுக்கு விசாரணையில், கேள்வி முன்னிலைப்படுத்தப்பட்டபோது புகார்தாரர் மறுத்துள்ளார். எனவே எதிரி குறிப்பிடும் மேற்படி சங்கதியை புகார்தாரர் மறுத்துள்ளபட்சத்தில் அதனை நிரூபணம் செய்யும் சுமை எதிரிக்கே உள்ளது. அவ்வாறு மேற்படி சங்கதியை எதிரி தரப்பில் நிரூபணம் செய்யும் விதமாக எந்தவொரு சாட்சிய சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே மேற்படி எதிரி தரப்பு வாதம் புகார்தாரர் வழக்கை பாதிப்பதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. மேலும் இவ்வழக்கில் வா.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரி மறுக்கவில்லை. எதிரி மற்றும் எதிரி தரப்பில் மேற்படி கையொப்பங்களை ஒப்புக்கொண்டுள்ள நிலையில், மேற்படி வழக்கு காசோலையானது சட்டப்பூர்வ கடனுக்காக வழங்கப்படவில்லை என்று நிரூபணம் செய்யும் சுமை எதிரிக்கே உள்ளது. இதுகுறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் 1) Kalaimani tex and another ..Vs.. P. Balasubramaniyan 2021 (5) SCC 283 என்ற வழக்கில் It is only upon the satisfaction of all the three conditions mentioned above and enumerated under the proviso to section 138 as clauses (a) (b)and (c) there of that an offence u/s138 can be said to have been committed by the person issuing the cheque. Once signature in cheque in admitted then it is mandate for the court to raise the presumptions as to the legally enforceable debt." என்றும், மேலும் 2) M.M.T.C. Ltd. and Another ..Vs.. Medchi chemicals and pharma (P) Ltd. and Another 2002(1) SCC 234 என்ற வழக்கில் That there is no requirement under the law that the complainant must specifically allege in the complaint that there was a subsisting liability. The burden of proving that there was no existing debt or liability is on the accused என்றும் 3) " In

LIVE LAW.IN / YHORITUA (watermark)

Indian bank association case 2014(5) SCC 590 Para 16 ல் " We make it clear that proviso (a), (b), (c) to Section 138 of the Act are shown to have been complied with technically that commission of the offence stands completed and it is for the accused to show that no offence could have been committed by him for specific reasons and defences." என்று குறிப்பிட்டுள்ளது. மேற்படி மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் எதிரி புகார்தாரருக்கு சட்டப்படியான கடன் எதுவும் செலுத்தப்படவேண்டியது இல்லை என்று நிரூபணம் செய்யும் சுமை எதிரிக்கு உள்ளது. அவ்வாறு எதிரி இவ்வழக்கில் காசோலையில் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டுள்ள நிலையில், மேற்படி காசோலையானது புகார்தாரருக்கு சட்டப்படியான கடன் தொகைக்கு வழங்கப்படவில்லை என்பது போதிய சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மூலம் இந்நீதிமன்றத்தில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேசமயம் புகார்தாரர் அவரது வழக்கினை பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் நிரூபணம் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிரி தரப்பில் பிரிவு 139 மாற்றுமுறை ஆவணச்சட்டம் கீழான சட்ட துணிபினை மறுக்கும் விதமாக எந்தவொரு சாட்சிய, சான்றாவணங்களையும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வில்லை. எனவே எதிரியின் கட்சி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்யப்படுகிறது. எதிரிக்கு மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் 1 வருடம் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும், இவ்வழக்கானது 2020 ம் ஆண்டு எதிரி பெற்ற கடன் தொகைக்காக அதை திரும்ப செலுத்தக் கோரி புகார்தாரர் தாக்கல் செய்துள்ளதாலும், இவ்வழக்கு 2022 ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து

VERDICTUM.IN

வருவதை கருத்தில் கொண்டும், வழக்கு செலவுத் தொகைகளை கருத்திற் கொண்டும், காசோலை தொகையான ரூ.8,00,000/- உடன் ரூ.25,000/-மும் சேர்த்து மொத்த இழப்பீடு ரூ.8,25,000/- புகார்தாரருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச. பிரிவு 357(3) ன்படி எதிரி தீர்ப்பு தேதியான இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வழங்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் 01 மாத காலம் மெய்க்காவல் சிறைத் தண்டனை விதித்தும் கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் கீழ் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

15. மேலும் எதிரி ஏற்கனவே சிறையில் இருந்திருந்தால் சிறையில் இருந்த காலத்தை தண்டனை காலத்தில் கழித்துக்கொள்ள குவிமுச பிரிவு 428 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு பின்னர் விரிவாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P.SUBHASHINI Digitally signed by P.SUBHASHINI Date: 2024.06.14 19:45:04 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திருச்சிராப்பள்ளி.

<u>1. மனுதாரர் தரப்பு சாட்சி :-</u>

வா.சா.1 - S.ரவிக்குமார்

<u>2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>

வா.சா.ஆ.1	28.06.2022	ரூ.8,00,000/-த்திற்கான காசோலை எண். 584501 - அசல்
வாசா.ஆ 2	08.07.2022	திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை

வா.சா.ஆ.3	18.07.2022	வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்
வா.சா.ஆ.4	26,07,2022	அஞ்சலக உறை

3. எதிரி தரப்பு சாட்சிகள்:– இல்லை

4. எதிரி தரப்பு சான்றாவணங்கள் :– இல்லை

P.SUBHASHINI Digitally signed by P.SUBHASHINI Date: 2024.06.14 19:45:18 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திருச்சிராப்பள்ளி.

JM No.I TRICHY